பள்ளி வேன் கவிழ்ந்து மாணவர்கள் 15 பேர் காயம்

ஆத்தூர், ஜூன் 19: சேலம் மாவட்டம், ஆத்தூர் புதுப்பேட்டையில் உள்ள தனியார் மெட்ரிக் மேல் நிலைப்பள்ளிக்கு அப்பகுதிகளை சேர்ந்த 45 மாணவர்களை ஏற்றிக்கொண்டு பள்ளிவேன் நேற்று காலை சென்று கொண்டிருந்தது. வேனை நடுவலூரை சேர்ந்த டிரைவர் உதயகுமார் (57) ஓட்டி வந்தார். வளையமாதேவி அடுத்த பனந்தோப்பு பகுதியில் திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையோர பள்ளத்தில் வேன் கவிழ்ந்தது. இதில் ஆசிரியை சுமதி மற்றும் 15 மாணவ, மாணவிகள் காயமடைந்தனர். அப்பகுதியினர் வந்து அனைவரையும் மீட்டு ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து ஆத்தூர் ஊரக போலீசார் வழக்குபதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மின்சார வேலியில் சிக்கி யானை பலி

கோபி, ஜூன் 19: ஈரோடு மாவட்டம் கோபி அருகே கரும்பாறை பகுதியில் வனத்தில் இருந்து வெளியேறி நாள்தோறும் 3 காட்டு யானைகள் மாலை 5 மணி முதல் அதிகாலை வரை விவசாய நிலங்களில் சுற்றித்திரிந்து பயிர்களை சேதப்படுத்தி வந்துள்ளது. இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு சுமார் 20 வயது மதிக்கத்தக்க கட்டையன் என்ற ஆண் யானை கரும்பாறை பகுதிக்கு வந்தது. அங்கு மழைநீர் ஓடையின் குறுக்கே விவசாய நிலத்தில் அமைக்கப்பட்டிருந்த உயர் அழுத்த மின்சார வேலியில் சிக்கி அந்த யானை பரிதாபமாக உயிரிழந்தது. இது குறித்து அந்தியூர் வனத்துறையினர் மற்றும் கள்ளிப்பட்டி மின் வாரியத்துறை அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

ஈரோடு தொகுதியில் ஏற்பட்ட தோல்வியால் விரக்தி

அதிமுக வேட்பாளர் நடத்திய 10 ரூபாய் உணவகம் திடீர் மூடல்

தேர்தல் 'ஸ்டன்ட்' அம்பலம்

காங்கயம், ஜூன் 19: பொது மக்களுக்கு சேவையாற்றுவதாக 'ஸ்டன்ட்' அடித்த ஈரோடு அதிமுக வேட்பாளர் ஆற்றல் அசோக்குமார், நாடாளுமன்ற தேர்தலில் தோல்வி அடைந்த விரக்தியில் மலிவு விலையில் பல்வேறு இடங்களில் தான் நடத்தி வந்த ஆற்றல் உணவகங்களை மூடினார்.

ஈரோடு நாடாளுமன்ற தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்டவர் ஆற்றல் அசோக்குமார். பிரபல பள்ளிகளை நடத்தி வரும் இவர் தேர்தல் வேட்புமனுவில் ₹550 கோடி சொத்து மதிப்பை காட்டி மிரள வைத்தார். அசோக்குமார் முன்னாள் அதிமுக எம்.பி. சவுந்திரத்தின் மகனும் தற்போதைய மொடக்குறிச்சி தொகுதி பாஜ எம்எல்ஏவுமான சரஸ்வதியின் மருமகனும் ஆவார்.

முதலில் பாஜவில் மாநில பொறுப்பில் இருந்தார். ஈரோடு தொகுதியில் பாஜ சார்பில் போட்டியிட சீட் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருந்தார். இந்நிலையில் அதிமுக, பாஜ கூட்டணி முறிவு ஏற்பட்டது. மேலும் தமிழக பாஜ தலைமையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால், பாஜவில் இருந்து விலகி எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் தேர்தலுக்கு சில மாதங்கள் முன்பு அதிமுகவில் இணைந்தார்.

ஈரோடு கிழக்கு, மேற்கு, மொடக்குறிச்சி, குமாரபாளையம், காங்கயம், தாராபுரம் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளை உள்ளடக்கிய ஈரோடு நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட்டு எம்பியாக திட்டமிட்டு செயல்பட்டார். கடந்த சில ஆண்டுகளாக சட்டசபை தொகுதிகளில் கோயில்கள், அரசு பள்ளிகள் ஆகியவற்றில் சமூகப்பணிகளில் ஈடுபட்டார். தேர்தல் தேதி நெருங்க நெருங்க 6 தொகுதிகளிலும் 10 ரூபாய்க்கு உணவு வழங்குவதாக ஆற்றல் உணவகம் என்ற பெயரில் உணவகத்தை தொடங்கி நடத்தி வந்தார். காலை, மதியம், இரவு என 3 வேளைக்கும் தலா ₹10 கட்டணம் என்பதால் ஏழை எளிய மக்கள் சாப்பிட்டு வந்தனர்.

இந்நிலையில் ஈரோடு தேர்தலில் திமுக வேட்பாளர் பிரகாசிடம் ஆற்றல் அசோக்குமார் தோல்வி அடைந்தார். இதையடுத்து பொதுமக்களுக்கான சேவை என்ற பெயரில் நடத்தி வந்த ஆற்றல் உணவகத்தை அவர் திடீரென மூடினார். அதன்படி திருப்பூர் மாவட்டம் காங்கயம், மூலனூர், கன்னிவாடி, குண்டடம், தாராபுரம் உள்ளிட்ட பல இடங்களில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு இரவோடு இரவாக உணவகத்தை காலி செய்தனர்.

மக்களுக்கு சேவை செய்வதாக விளம்பரப்படுத்தி ஆற்றல் அசோக்குமார் துவங்கிய சில மாதங்களில் மலிவு விலை உணவகங்களை திடீரென மூடியதால் பொதுமக்கள் ஏமாற்றம் அடைந்தனர். பல இடங்களில் தலைமை ஏற்று ஆற்றல் உணவகத்தை திறந்து வைத்த அதிமுக நிர்வாகிகள், தற்போது உணவகத்தை மூடியதால் பொதுமக்கள் தங்களை கேள்வி கேட்பார்களே என்ற கலக்கத்தில் உள்ளனர். தேர்தலுக்காகத்தான், சேவையாற்றுவதாக ஆற்றல் அசோக்குமார் 'ஸ்டன்ட்' அடித்திருக்கிறார் என பொதுமக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

▶ காங்கயம் நெடுஞ்சாலைத்துறை பயணியர் மாளிகை எதிரே இயங்கி வந்த ஆற்றல் மலிவு விலை உணவகம் காலி செய்யப்பட்டு பெயர் பலகை டெம்போவில் ஏற்றப்படுகிறது.

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல்

திமுக, பாமக வேட்பாளர்கள் இன்று மனுதாக்கல்

விழுப்புரம், ஜூன் 19: விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் திமுக, பாமக வேட்பாளர்கள் இன்று வேட்புமனு தாக்கல் செய்கின்றனர். நாளை முதல் தலைவர்கள் அனல் பறக்கும் பிரசாரத்தை தொடங்க உள்ளனர்.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதி திமுக எம்எல்ஏ புகழேந்தி காலமானதை தொடர்ந்து அங்கு வரும் ஜூலை 10ம் தேதி இடைத்தேர்தல் நடக்கிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 14ம் தேதி தொடங்கியது. அன்று ஒரே நாளில் விதவிதமான கெட்டப்புகளில் 5 சுயேச்சை வேட்பாளர்கள் மனுதாக்கல் செய்தனர். தொடர்ந்து 15ம் தேதி ஒரு சுயேச்சை, நேற்று திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்த சித்த மருத்துவர் நரேந்திரன் என்பவர் சுயேச்சையாக மனுதாக்கல் செய்தார். இதுவரை 7 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

இந்தியா கூட்டணியில் திமுக வேட்பாளராக அன்னியூர் சிவா, பாஜ கூட்டணியில் பாமக வேட்பாளராக அன்புமணி, நாம் தமிழர் கட்சியில் அபிநயா அறிவிக்கப்பட்டுள்ளனர். அதிமுகவும், தேமுதிகவும் இடைத்தேர்தலை புறக்கணித்துள்ளது. இதனால் இடைத்தேர்தலில் மும்முனை போட்டி ஏற்பட்டுள்ளது.

வேட்புமனு தாக்கல் 21ம் தேதியுடன் முடிவடையும் நிலையில் இன்று திமுக, பாமக வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்ய உள்ளனர். திமுக வேட்பாளர் அன்னியூர் சிவா, தேர்தல் பணிக்குழு ஜெகத்ரட்சகன் எம்.பி., அமைச்சர் பொன்முடி தலைமையில் கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் ஊர்வலமாக சென்று பிற்பகல் 12 மணியளவில் தாலுகா அலுவலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்கிறார். மதியம் 1 மணியளவில் பாமக வேட்பாளர் அன்புமணி கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் ஊர்வலமாக சென்று வேட்புமனு தாக்கல் செய்கிறார். இதில் அக்கட்சியின் தலைவர் அன்புமணி எம்பியும் கலந்து கொள்கிறார்.

நாம் தமிழர் வேட்பாளர் அபிநயா நாளை மனு தாக்கல் செய்ய உள்ளார். நாளை மறுதினம் வேட்புமனு தாக்கல் முடிவடைகிறது. 24ம் தேதி வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை நடக்கிறது. 26ம் தேதி வேட்பு மனுக்களை வாபஸ் பெற கடைசி நாள். அன்று வேட்பாளர் இறுதி பட்டியல் வெளியிடப்படுகிறது.

நாளை முதல் திமுக, பாமக வேட்பாளர்களும், அக்கட்சி தலைவர்கள், கூட்டணி கட்சி தலைவர்கள் அனல் பறக்கும் பிரசாரத்தில் ஈடுபடுகின்றனர். திமுக வேட்பாளரை ஆதரித்து ஏற்கனவே அமைச்சர்கள் பிரசாரத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கனிமொழி எம்.பி. மற்றும் கூட்டணி கட்சி தலைவர்களான செல்வப்பெருந்தகை, திருமாவளவன், பாலகிருஷ்ணன், முத்தரசன் உள்ளிட்டோரும் பிரசாரம் மேற்கொள்ள உள்ளனர்.

தேர்தலுக்கு ஒரு வாரத்துக்கு முன்னதாக திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பிரசாரம் செய்ய உள்ளார்.

இதேபோல், பாமக வேட்பாளரை ஆதரித்து ராமதாஸ், அன்புமணி மற்றும் கூட்டணி கட்சிகளான பாஜ தலைவர் அண்ணாமலை, ஓபிஎஸ், டிடிவி.தினகரன், ஜி.கே.வாசன், ஜான் பாண்டியன் உள்ளிட்டவர்களும், நாம் தமிழர் கட்சி அபிநயாவை ஆதரித்து ஒருங்கிணைப்பாளர் சீமானும் பிரசாரத்தில் ஈடுபடுகின்றனர். எனவே நாளை முதல் அனல் பறக்கும் பிரசாரம் தொடங்குகிறது.

நாளை முதல் தலைவர்கள் அனல் பறக்கும் பிரசாரம் தொடக்கம்

▶ அன்னியூர் சிவா, அன்புமணி

மக்களை காக்க வேண்டிய போலீஸ் மீது வழக்குகள்

பெண் இன்ஸ்பெக்டருக்கு ஜாமீன் வழங்க முடியாது

மனுவை தள்ளுபடி செய்தது ஐகோர்ட் கிளை

மதுரை, ஜூன் 19: கொலை வழக்கில் கைதான பெண் இன்ஸ்பெக்டரின் ஜாமீன் மனுவை ஐகோர்ட் கிளை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் அருகே மேட்டுப்பட்டி வலசையைச் சேர்ந்தவர் சத்தியஷீலா. இவர், ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் முகாம் மற்றும் சைபர் கிரைம் இன்ஸ்பெக்டராக இருந்தார். விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் திருவிழா தகராறில் ராமர் என்பவர் கொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் ஸ்ரீவில்லிபுத்தூர் டவுன் போலீசார், இன்ஸ்பெக்டர் சத்தியஷீலாவை கைது செய்தனர். இதையடுத்து அவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். கொலை வழக்கில் தனக்கு ஜாமீன் கோரி ஐகோர்ட் மதுரை கிளையில் மனு செய்தார்.

அதில், "கொலை வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் என் பெயர் இல்லை. கைதானவரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் என்னையும் வேண்டுமென்றே இவ்வழக்கில் சேர்த்துள்ளனர். எனவே, ஜாமீன் வழங்க வேண்டும்" என்று கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதி பி.புகழேந்தி முன் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில், "மனுதாரர் மீது இரு வழக்குகள் நிலுவையில் உள்ளது" என கூறப்பட்டது.

இதையடுத்து நீதிபதி பி.புகழேந்தி, "மனுதாரர் மீது இரு வழக்குகள் நிலுவையில் உள்ளதாக போலீசார் தரப்பில் கூறப்படுகிறது. மக்களை காக்கவேண்டிய போலீஸ் மீது வழக்குகள் நிலுவையில் உள்ளதால் மனுதாரருக்கு ஜாமீன் வழங்க முடியாது. எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது" என உத்தரவிட்டுள்ளார்.

மேட்டூரில் 600 மெகாவாட் மின் உற்பத்தி பாதிப்பு

மேட்டூர், ஜூன் 19: மேட்டூர் அனல் மின் நிலையத்தின் முதல் பிரிவில் தலா 210 மெகாவாட் திறன் கொண்ட நான்கு அலகுகள் மூலம் 840 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. 2வது பிரிவில் 600 மெகாவாட் திறன் கொண்ட ஒரு அலகு மூலம் 600 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

நேற்று காலை 6 மணிக்கு 2வது பிரிவில் கொதிகலன் குழாயில் ஏற்பட்ட வெடிப்பு காரணமாக 600 மெகாவாட் மின்சார உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. கொதிகலன் குழாய் வெடிப்பை சரி செய்யும் பணியில் பொறியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். அது சரி செய்யப்பட்ட பிறகு மீண்டும் மின் உற்பத்தி துவங்கும் என்று மேட்டூர் அனல் மின் நிலைய பொறியாளர்கள் தெரிவித்து உள்ளனர்.

₹2 லட்சம் லஞ்சம்: இன்ஸ்பெக்டர் மீது வழக்கு

புதுக்கோட்டை, ஜூன் 19: புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை காவல் நிலையத்தில் 2023ல் இன்ஸ்பெக்டராக பணியாற்றியவர் ராஜேந்திரன் (55). இவர் தற்போது திருச்சி மாவட்டம் தொட்டியம் இன்ஸ்பெக்டராக பணியாற்றி வருகிறார். விராலிமலை அருகே பொருவாய் கிராமத்தில் செங்கல்பட்டு மாவட்டம் ஊரப்பாக்கத்தை சேர்ந்த ராஜ்குமாருக்கு சொந்தமான நிலத்தை விற்பனை செய்வதில் அவருக்கும், நிலத்தரகர்களுக்கும் ஏற்பட்ட பிரச்னையில் விராலிமலை காவல் நிலையத்தில் 2023 மார்ச் 17ம்தேதி புகார் அளிக்கப்பட்டது.

இதில் ராஜ்குமார் மீது வழக்கு பதிவு செய்யாமல் இருக்க இன்ஸ்பெக்டர் ₹2லட்சம் லஞ்சமாக பெற்றுள்ளார். இதுதொடர்பாக கடந்த 2023 அக்.4ம் தேதி புதுக்கோட்டை மாவட்ட ஊழல்தடுப்புமற்றும் கண்காணிப்பு பிரிவு போலீசாருக்கு புகார் வந்தது. குற்றச்சாட்டு உறுதியானதால் நேற்று இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் மீது போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழ் நாடு கூட்டுறவு விற்பனை இணையம் லிட் X-401
91, தூய மேரி சாலை, சென்னை–18, தொலைபேசி: 24936003
(நிகரி) Fax 044 - 24936205 (மின் அஞ்சல்) E-Mail tanfedfertsection@gmail.com

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியனவற்றிற்கு ஜூலை 2024 முதல் ஜூன் 2025 வரையிலான ஓராண்டுக் காலத்திற்குத் தேவைப்படுகின்ற ஆர்கானிக் மேன்யூர் உரங்கள் விலை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கு மின்னணு ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளி தொடர்பான விவரங்கள் tntenders.gov.in என்ற இணைய தளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மின்னணு ஒப்பந்தப் புள்ளிகளை மேற்காண் இணைய தளத்தில் **05.07.2024 அன்று காலை 11.00 மணிக்குள்** அளிக்கலாம். பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அன்றைய தினம் **பிற்பகல் 3.00 மணியளவில்** நியமிக்கப்பட்ட ஒப்பந்தக் குழுவினரால் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகளின் நிபந்தனைகள் மற்றும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்பது (ம) நிராகரிப்பது (அ) பகுதியாக நிராகரிப்பது (அ) வழங்குவதற்கான நாளினை மாற்றியமைக்க ஒப்பந்தப் புள்ளிக் குழுவிற்கு முழு அதிகாரம் உண்டு.

சென்னை–18.
நாள்: 18.06.2024 செ.ம.தொ.இ./1990/ஒப்பந்தப்புள்ளி/2024 மேலாண்மை இயக்குநர்

தமிழ்நாடு சிறு தொழில்வளர்ச்சி நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
சிட்கோ தலைமை அலுவலக வளாகம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை–600 032
தொலைபேசி எண்கள் 2950 1422, 29500317, 29501461,
இணையதளம் www.tansidco.tn.gov.in

திருச்சி மாவட்டம், மணப்பாறை கிராமத்தில் அமைந்துள்ள தொழிற்பேட்டையில் தொழில் மனைகள் ஒதுக்கீடு செய்ய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

பார்வைஎண்:3547/தொ.பே-4-1/2022

சிட்கோ நிறுவனத்தின், மணப்பாறை தொழிற்பேட்டையில் காலியாக உள்ள தொழில் மனைகள், 99 வருட குத்தகை முறையில் ஒதுக்கீடு செய்வதற்காக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

காலியாக உள்ள தொழில் மனைகள் பற்றிய அதன் விலை, நிபந்தனைகள் மற்றும் விவரங்கள், www.tansidco.tn.gov.in என்ற இணையதளத்தில் காணலாம். மணப்பாறை தொழிற்பேட்டையில் அமைந்துள்ள தொழில் மனைகள் ஒதுக்கீடு பெற விரும்புவோர் சிட்கோ இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம்

செ.ம.தொ.இ/595/வரைகலை/2024 நிர்வாக இயக்குநர், சிட்கோ

பேங்க் ஆஃப் இந்தியா Relationship beyond banking
கிண்டி கிளை
"மவுண்ட் வியூ பில்டிங்", 111, மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை - 600 032.
போன் : 044-22355183, 22350638,22352453,
மின்னஞ்சல் : Guindy.Chennai@bankofindia.co.in

2002-ஆம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ஒரொக்கமாக்குதல், நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்தின் உரிமை அமலாக்கச்சட்டம் பிரிவு 13 (2)-ன் கீழ் அறிவிப்பு

வங்கி 01.06.2024 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பை 13(2) பிரிவின் கீழ் கடன்தாரர் / இணைகடன்தாரர் / ஜாமீன்தாரருக்கு வழங்கி உள்ளது. கடன்தாரர் / இணைகடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் கோரிக்கை அறிவிப்பை தவிர்ப்பதால் SARFAESI சட்டத்தின் கீழ் இணங்க இதன் மூலம் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கடன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி: திரு.பிரசாத் ஏற்றபோது த/பெ E. சுப்புராமநாயுடு, எண்.B-11, பாவேந்தர் சாலை, NH2 விரிவாக்கம், மறைமலைநகர், காஞ்சிபுரம், சென்னை - 603 209 மற்றும் திரு.ரு.ஆ. ஜெய்சங்கர் (ஜாமீன்தாரர்) த/பெ.U.முனிரத்தினம், எண்.1102, வல்லஞ்சேரி, டவர் 1, GST சாலை, NH45, எஸ்டேன்சியா, செங்கல்பட்டு, சென்னை - 603 209.

கடன் கணக்கு எண்.801162610000126. அனுமதிக்கப்பட்ட கடன் வரம்பு : ரூ.27,00,000/- நிலுவை தொகை: ரூ.24,37,234.39 + 30.04.2024 முதல் வருடத்திற்கு 11.35 % வட்டி. **NPA தேதி: 29.05.2024**

அசையா சொத்துக்கள்: பிரசாத் ஏற்றப்போது அவர்கள் பெயரில் உள்ள செங்கல்பட்டு பதிவு மாவட்டம், செங்கல்பட்டு இணை-II துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுகா, எண்.56, காட்டாங்குளத்தூர் கிராமத்தில், பழைய கிராம நத்தம் சர்வே எண்.294/2, புதிய கிராம நத்தம் சர்வே எண்.362/2 பகுதி மற்றும் 362/12 பகுதி, பட்டாவின்படி தற்போதைய சர்வே எண்.362/25, 362/26, பட்டா எண்.883-ன்படி சர்வே எண்.362/26A -ன்படி **2920 சதுர அடி** காலி நிலத்துடன் பொது வழியின் 1/4 பங்கான UDS (அதாவது 750 சதுர அடி) சேரத்து மொத்த பரப்பளவு 3670 சதுர அடி, மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும் மற்றும் **எல்லைகள்:** வடக்கில்: CMDA-க்கு சொந்தமான நிலம், தெற்கில்: பொது வழி, கிழக்கில்: மைனர் J.ரஜனேஷ் அவர்களுக்கு தீர்வான சொத்து, மேற்கில் : செங்கேணி மற்றும் ஏழுமலை ஆகியோர்களின் வீடு, **அளவுகள்:** கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில்: 80 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில்: 80 அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில்: 36 அடி 6 அங்குலம், வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில்: 36 அடி 6 அங்குலம்.

எனவே, கடன்தாரர்/இணைகடன்தாரர் / ஜாமின்தாரருக்கு, இந்த அறிவிப்பை வெளியிடப்பட்ட 60 நாட்களுக்குள், கடன்தாரர் / இணை கடன்தாரர் / ஜாமீன்தாரருக்கும் மேலே குறிப்பிட்டுள்ள மொத்தத் தொகையைச் செலுத்துமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட தேதியின்படி கடன் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்கால வட்டி மற்றும் செலுத்தும் தேதி வரை செலுத்தப்பட வேண்டிய பிற தொகைகளுடன் சேர்த்து மொத்தத் தொகையும் செலுத்தப்படாவிட்டால், மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களின் மீதான கடனீட்டு சொத்துக்கள் அமல்படுத்துவதற்கு பேங்க் ஆஃப் இந்தியா தகுந்த நடவடிக்கை எடுக்கக் கட்டுப்படுத்தப்படும் என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் கீழ் கூறப்பட்ட நிதிகளுக்கு கடன்தாரர் / இணைகடன்தாரா / ஜாமீன்தாரர்களுக்கு எதிராக பேங்க் ஆஃப் இந்தியா வங்கிக்குக் கிடைக்கும் உரிமைகள் மற்றும் தீர்வுகளுக்கு பாரபட்சமின்றி இந்தப் பிரசுரம் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்ளவும், பிரிவு 13(13)ன் படி மேலே கூறப்பட்ட பாதுகாப்பை அப்புறப்படுத்துவது அல்லது கையாள்வது அல்லது பாதுகாக்கப்பட்ட கடனாளியின் முன் அனுமதியின்றி பாதுகாக்கப்பட்ட சொத்தை விற்பனை, குத்தகை பரிசு, பணி அல்லது வேறு எந்த இடத்திலும் நீங்கள் பரிமாற்றம் செய்வது ஆகியவற்றிலிருந்து நீங்கள் தடுக்கப்பட்டுள்ளீர்கள்/தடைசெய்யப்பட்டுள்ளீர்கள்.

இடம் : சென்னை
தேதி : 01.06.2024
முதன்மை மேலாளர் / அதிகாரப்பூர்வ அதிகாரி
பேங்க் ஆஃப் இந்தியா

ஒன்றிய அமைச்சரை கண்டித்து போராட்டம்

▶ மேகதாது அணை கட்டுவது தொடர்பாக தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா அரசுகள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று சர்ச்சைக்குரிய வகையில் பேசிய ஒன்றிய இணை அமைச்சர் சோமன்னாவை கண்டித்து, தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில், நெல் மூட்டையுடன் தஞ்சாவூர்-கல்லணை கால்வாயில் இறங்கி விவசாயிகள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்

கோயிலில் கஞ்சா படையலிட வந்த 6 வடமாநில வாலிபர்கள்

கலசபாக்கம், ஜூன் 19: திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் அடுத்த தென் மகாதேவ மங்கலம் கிராமத்தில் 4560 அடி உயரமுள்ள பர்வதமலை மீது சுமார் 2 ஆயிரம் ஆண்டுகள் பழமையான பிரம்மராம்பிகை அம்மன் சமேத மல்லிகார்ஜுனேஸ்வரர் கோயில் உள்ளது. நேற்று முன்தினம் வனத்துறையினர் மலை அடிவாரத்தில் சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது வட மாநிலத்தைச் சேர்ந்த 6 வாலிபர்களை பிடித்து சோதனை நடத்தினர் அவர்களிடம் சிகரெட், குட்கா மற்றும் கஞ்சா இருந்தது தெரியவந்தது. அதை பறிமுதல் செய்து விசாரித்தனர்.

இதில் வட மாநிலங்களில் உள்ள சிவாலயங்களில் இவற்றை சுவாமிக்கு படையலுக்கு வைப்பார்களாம். அதேபோல் இங்கும் வைப்பார்கள் என கருதி எடுத்து வந்ததாக 6 பேரும் கூறியுள்ளனர் அவர்கள் 6 பேரையும் வனத்துறையினர் எச்சரித்து அனுப்பினர்.

வேலூர் ராணுவ வீரர் நாக்பூரில் பஸ் மோதி பலி

அணைக்கட்டு, ஜூன் 19: வேலூர் மாவட்டம், அணைக்கட்டு அடுத்த புலிமேடு கிராமத்தை சேர்ந்தவர் கோவிந்தசாமி-தவமணி தம்பதியின் 2வது மகன் விக்னேஷ் (23), ராணுவ வீரர். கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு பணியில் சேர்ந்து, கடைசியாக நாக்பூர் மாநிலத்தில் பணியாற்றி வந்தார். விக்னேஷுக்கு திருமணம் செய்து வைக்க பெற்றோர் முடிவு செய்து பெண் பார்க்கப்பட்டது. அவர் அடுத்த மாதம் விடுமுறையில் ஊருக்கு வந்ததும் நிச்சயதார்த்தம் மற்றும் திருமணம் நடத்த இருந்தனர். இந்நிலையில், கடந்த 16ம் தேதி விக்னேஷ் ஆட்டோவில் புறப்பட்டு வேலைக்கு சென்று கொண்டிருந்தார். அப்போது, எதிரே வந்த பஸ் மோதியதில், படுகாயம் அடைந்த விக்னேஷ் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

இதையடுத்து, விக்னேஷ் உடல் நேற்று சொந்த ஊரான புலிமேடு கிராமத்திற்கு கொண்டு வரப்பட்டு உறவினர்கள் மற்றும் கிராம மக்கள் அஞ்சலி செலுத்தினர். ராணுவ அதிகாரிகள் விக்னேஷின் உடல் மீது தேசியக்கொடியை போர்த்தி மரியாதை செய்தபின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

வருவாய் ஆய்வாளர் விபத்தில் மூளைச்சாவு உறுப்புகள் தானம்

நெல்லை, ஜூன் 19: நெல்லை பாளையங்கோட்டையைச் சேர்ந்தவர் மாதவ சங்கர் (37). நாங்குநேரி தாலுகா முதுநிலை வருவாய் ஆய்வாளர். கடந்த 13ம் தேதி தாலுகா அலுவலகத்தில் இருந்து பைக்கில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது சாலையின் குறுக்கே வந்தவர் மீது பைக் மோதியதில் மாதவ சங்கருக்கு மூளைச்சாவு ஏற்பட்டது.

இதையடுத்து அவரது கல்லீரல் மதுரை தனியார் மருத்துவமனைக்கும், கருவிழிகள் மற்றும் ஒரு கிட்னி நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும், மற்றொரு கிட்னி மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

TAMIL NADU CEMENTS CORPORATION LIMITED
(A GOVERNMENT OF TAMIL NADU UNDERTAKING)
5th Floor, Aavin Illam, No.3A, Pasumpon Muthuramalingam Salai, Nandanam, Chennai-600 035.
e-TENDER NOTICE

e-Tender Ref.No:11/2024-25, Appointment of Transport Contractors for movement of packed cement through open trucks from Ariyalur Cement Works to various destination in Tamil Nadu, Puducherry & Kerala
Est. Value: **Rs.42.33 Crore, EMD: Rs.50,000/-**
Submission of tender: Up to 3.00 P.M. on 18.07.2024
Important Note:
A pre-bid meeting will be held on **01.07.2024 at 3.00 pm** at TANCEM, Registered Office, 5th Floor, Aavin Illam, No.3A, Pasumpon Muthuramalingam Salai, Nandanam, Chennai – 600 035.
The Tender document can be downloaded from **https://tntenders.gov.in**
Corrigendum / Addendum to this publication, if any would appear only on the above said website.
DIPR/1986/TENDER/2024 GENERAL MANAGER (MARKETING)/DRO

கோயம்புத்தூர் மாநகராட்சி
ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண். e28/2024 நாள்.18.06.2024
கோயம்புத்தூர் மாநகராட்சி– சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை
நிதி மற்றும் பொதுநிதி– செம்மொழி பூங்காவிற்கு கூடுதல் அபிவிருத்தி பணிகள் இரு உறைகள் முறை

1. கோயம்புத்தூர் மாநகராட்சி– சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை நிதி மற்றும் பொதுநிதி– செம்மொழி பூங்காவிற்கு கூடுதல் அபிவிருத்தி பணிகள் – ஒப்பந்தப்புள்ளிகள் இரு உறைகள் முறையில் வரவேற்கப்படுகின்றன.
2. ந.க.எண்.5753/2022/எம்.டி.5
3. மொத்த மதிப்பீட்டுத் தொகை **ரூ.3554.55 இலட்சம்** ஆகும்.
4. ஒப்பந்தப்புள்ளியினை **https://tntenders.gov.in** என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொ